# வானவில்

இதழ் - 1 தை 2011

# மகிந்த தனது இரண்டாவது பதவிக் காலத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பாரா?

இலங்கையின் நீடித்துச் செல்லும் இனப்பிரச்சினைக்கு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தனது இரண்டாவது ஆட்சிக்காலத்தில் நியாயமானதும், நிரந்தரமானதுமான தீர்வொன்றைக் காண்பாரா என்பது குறித்து, இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்கள், புலம்பெயர் தமிழ் மக்கள், இந்தப் பிரச்சினையில் தவிர்க்க முடியாதபடி ஈடுபாடு கொண்டுள்ள இந்தியா மற்றும் சர்வதேச சமூகம் என அனைத்துத் தரப்பினரும் கேட்கின்ற கேள்வியாக இருக்கின்றது. இந்தக் கேள்வியின் பின்னால், இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாக கடந்த காலங்களில் மேற்கொண்ட முயற்சிகளின் கசப்பான அனுபவங்கள் இருப்பது ஒன்றும் இரகசியமானதல்ல.

கடந்த கால இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளை எடுத்து நோக்குகையில், இலங்கையின் வெஸ்ற்மினிஸ்ற்றர் முறையிலான இரு கட்சி ஆட்சி முறையில், ஆட்சியிலுள்ள கட்சி ஒன்று இனப்பிரச்சினைத் தீர்வுக்கென சில முயற்சிகளைத்தன்னும் எடுத்த வேளைகளில், எதிர்க்கட்சி அதை குழப்புவதும், பின்னர் அந்த எதிர்க்கட்சி ஆளும் கட்சியாக மாறி, அது சில முயற்சிகளை எடுக்கையில் எதிர்க்கட்சியாக மாறிய முன்னைய ஆளும் கட்சி அதைக் குழப்புவதும் இலங்கையின் வரலாறாக இருந்து வந்துள்ளது.

அப்படியில்லாமல், சில நிர்ப்பந்தங்கள் காரணமாகத் தன்னும் இலங்கையின் ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் சில, தீர்வு முயற்சிகளை எதிர்ப்புகளையும் மீறி செயல்படுத்த முனைந்த போது, தமிழ் மக்களுக்காக உரிமை கோரி நின்ற தமிழ் தலைமைகளே தமது அரசியல் லாபத்துக்காகவும், இருப்புக்காகவும் அவற்றைக் குழப்பியடித்த வரலாறுகளும் உண்டு. 1987ல் உருவான இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் உருவான 13வது திருத்தச் சட்டத்தின் கீழான மாகாணசபைகள் தீர்வும், 2000ம் ஆண்டு சந்திரிகா பண்டாரநாயக்க அரசாங்கம் கொண்டு வந்த தீர்வுப்பொதியும் அவ்வாறு தமிழ் தலைமைகளால் தோற்கடிக்கப்பட்டதற்கு உதாரணங்களாகும்.

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க..

## வாழ்த்துக்கள்

பிறந்துள்ள 2011 புத்தாண்டில், அனைத்துத் தரப்பு மக்களும் தமது நியாயமான உரிமைப் போராட்டங்களில் மேலும் பல புதிய வெற்றிகளைப் பெற வாழ்த்துகிறோம்.

**ஆசிரியர் குழு**

# வாசகர்களுக்கு ஒரு வார்த்தை

கனடாவில் வண்ண வண்ண நிறங்களில், தொகையான பக்கங்களில், பரபரப்பான செய்திகளுடனும், ஏராளமான விளம்பரங்களுடனும், இலங்கைத் தமிழர்களால் நடாத்தப்படும் சுமார் இரண்டு டசின் தமிழ் மற்றும் ஆங்கில பத்திரிகைகள் இருக்கையில், இந்தச் சின்னஞ்சிறு கையேடான வானவில் வந்து, என்னத்தைச் சாதிக்கப் போகின்றது என்ற கேள்வி, உங்கள் பலரின் மனதில் எழக்கூடும். உண்மைதான், வானவில் உடனடியாகப் பெரிதாக எதையும் சாதித்து விடப்போவதில்லைதான்!

ஆனால் எதற்காக எம்மில் சிலருக்கு இப்படியான ஒரு பத்திரிகையை வெளியிட வேண்டும் என்று தோன்றியது என்பதில் தான், அதற்கான விடை தங்கி உள்ளது.

கனடாவில் வெளிவருகின்ற தமிழர்களின் பத்திரிகைகள் இரண்டு வகைப்பட்டவை. ஒருவகை, புலிகளால் தமிழ் தேசியம் என்ற அழகிய பதாதையின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வந்த, பிற்போக்கு தமிழ் தேசியவெறிப் பாசிசத்தை ஆதரித்துத் தொடங்கப்பட்டவை. மற்றவை ஊடக தர்மம் பற்றியோ, ஊடகத்துறை சம்பந்தமாகவோ முன் அனுபவம் ஒருபோதும் இல்லாத சிலரால், வருமான நோக்கத்துக்காகத் தொடங்கப்பட்ட பிழைப்புவாத பத்திரிகைகள். அவர்களும் தமது பிழைப்புக்காக புலிகளையே சார்ந்து இருக்கப் பழகிக் கொண்டதனால், தமிழ் மக்களின் ஊடகத் தேவையைச் சரியான முறையில் பூர்த்தி செய்ய முடியாமல் போனவர்கள்.

எனவே இத்தகைய பத்திரிகைகள், புலிகளின் ஆணைக்கோலுக்கு அஞ்சி, இங்குள்ள தமிழ்ப் பொதுமக்களுக்கு உண்மையான செய்திகளையும், கருத்துக்களையும் கூறாது பொய் பரப்புரைகளையே செய்து வந்துள்ளன. தொடர்ந்தும் செய்கின்றன. அவைகள் தமிழர்கள் சமூகத்தில் நிலவ வேண்டிய ஜனநாயகம், பன்மைத்துவம், மனித உரிமைகள் பற்றி ஒருபோதும் வலியுறுத்தியதில்லை. இதன் காரணமாக புலிப்பாசிசத்தை ஆதரிக்கின்ற, ஆக மிஞ்சிப்போனால் ஒரு இருபது வீதமான கனடியத் தமிழர்களைத் தவிர, எனைய எண்பது வீதமான தமிழ் மக்களுக்கு, ஒரு உண்மையான தமிழ்ப் பத்திரிகையின் தேவை இருந்து கொண்டே இருக்கின்றது.

எனவே தான், இங்குள்ள தமிழர் சமுதாயத்திற்கு, சிறிய அளவிலேனும், உண்மையான தகவல்களையும், கருத்துக்களையும் எடுத்துச் சொல்வதற்காக, எம்மவர் சிலரால் இச்சிற்றேடு கொண்டு வரப்படுகிறது. இது ஏற்படுத்தப் போகும் தாக்கம், இதன் வளர்ச்சி என்பனவற்றை இப்பொழுது எதிர்வு கூற முடியாது எனினும், இதன் அவசியம் உணரப்பட்டால், இப்போதைக்கு எம்மைப் பொறுத்தவரை அதுவே பெரும் வெற்றியாகும்.

நன்றி

**ஆசிரியர் குழு**

---

**தொடர்பு முகவரி:**

'வானவில்' இதழுக்கு கட்டுரைகள், துணுக்குகள், தகவல்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள் என்பனவற்றை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

sunvaanavil@gmail.com

---

யதார்த்தவாதம் முற்போக்கு இயக்கங்களினதும் புரட்சிகர இயக்கங்களினதும் கொள்கைக்குரலாக நிலைகொண்டுள்ளது.

**- றேம்ண் வில்லியம்ஸ்**

---

# பாட்டும் பயனும்

## சன்னதன்

**"தாலாட்டுப் பாட மாட்டேன்
தமிழீழப் பிள்ளை, என் பிள்ளை – அவன்
தலைசாய்ந்து தூங்க இது நேரமில்லை"**

எத்தகைய அருமையான வரிகள். புறநானூற்றுப் புழகாங்கிதத்தையும் புறங்காணச் செய்யும், தமிழீழத் தாயின் வார்த்தை வெளிப்பாடு.

மார்பிலே வேல் பாய்ந்து மரணித்தான் மைந்தன் என்று கண்டதும், மாரடித்து ஒப்பாரி வைத்து அரற்றாமல், மார்தட்டி என் மகன் வீரன் என்று, வெற்றி முழக்கம் கொட்டிய மறத் தமிழ்த்தாயின் வாரிசல்லவா எங்கள் தமிழீழத் தாய். இருக்காதா பின்னே? முறம் கொண்டு புலி விரட்டிய வீரமெல்லாம் விட்டுப் போய்விடுமா? ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தொடரும் வீரப் பாரம்பரியம் என்ன விடுபட்டா போய்விடும்? வலராறு என்பது என்ன வளர்ச்சியில்லாமலா கிடந்து விடும்?

ஊர் உலகத்திற்கெல்லாம் தெரிகிற போது, பெற்ற தாய்க்குத் தெரியாதா? தாலாட்டுப்பாடி தூங்க வைக்கும் குழந்தைக்கு எத்தனை வயது இருக்குமென்று? அந்தக் குழந்தைக்கே பாசாணம் கொடுத்துப் படையணி சேர்த்த தமிழ்த்தாயை மறந்து விடலாமா? உலகத் தமிழினமே எண்ணிப்பார்! இதையும் எண்ணிப்பார்!!

"வட கிழக்கை இந்திய இராணுவம் ஆக்கிரமித்திருந்த காலத்தில், மதி பெரும் மனத் துயரங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. இந்தியாவுக்கும் புலிகளுக்கும் போர் தொடங்கியதும், நல்லூர் கந்தசாமி கோவிலில் அகதிகளாகத் தஞ்சமடைந்தவர்களில் மதியும் ஒருவர். அதன் பின்னர், மதி தனது பெற்றோரிடம் பிள்ளைகளை ஒப்படைத்து விட்டு, முல்லைத்தீவு மணலாற்றுப் பகுதியில், அளம்பில் காடுகளுக்குள் தனது கணவருடன் சேர்ந்து கொண்டார். ஒருபுறம் அவர்களுடைய அளம்பில் முகாம் மீது இடையறாது நடந்த செல் அடி. மறுபக்கம் தத்தி அடிவைக்கும் மழலைப் பாலரை விட்டுப் பிரிந்த ஒரு இளம் தாயின் பிரிவுத் துயர். இனி இந்திய இராணுவத்திற்கெதிரான மோதலில் தம்பியைச் சாகக் கொடுத்த இழப்புத் துயர். இவையெல்லாம் மதியை வெகுவாகப் பாதித்தன.

பின்னர் பிள்ளைகளோடு சேர்க்கப்பட்ட மதி, வெளிநாடு சென்று சுவீடனில் வாழ்ந்தார். சுவீடனில் இரண்டு பிள்ளைகளுடன் தலைமறைவான வாழ்க்கை. முன் பின் அறிமுகமில்லாத ஒரு கலாச்சாரம். இடையறாத ஆபத்துக்கு மத்தியில் வாழும் கணவனிடமிருந்து பிரிவு. ஆதரவு தர நெருங்கிய உறவினர்கள் எவரும் இல்லாது இருந்தமை. இவை எல்லாம் மனச் சஞ்சலத்துக்கும் மனச் சோர்வுக்கும் மதியை உள்ளாக்கின. பிரேமதாச அரசுடன் 1989லே பேச்சுவார்த்தையைத் தொடங்கிய போது, மதி இலங்கைக்கு திரும்பிச் செல்வதற்கான ஏற்பாடுகளை பாலா செய்தார். இலங்கைக்கு நாம் திரும்பிச் சென்ற ஒரு பயணத்தின் போது, மதியும் பிள்ளைகளும் சிங்கப்பூரில் எம்மோடு சேர்ந்து கொண்டார்கள். நாம் கொழும்பு சென்றடைந்ததும், அளம்பில் காட்டுக்கு நாம் செல்வதற்கு உலங்கு வானூர்தி ஒன்றை, பிரேமதாச அரசு ஏற்பாடு செய்து தந்தது. இதனால் 1989ல் மதி திரும்பவும் கணவருடன் இணைந்து கொண்டார்."

(அடேல் பாலசிங்கம் எழுதிய 'சுதந்திர வேட்கை' 118, 119ம் பக்கங்கள் - மதி என் இங்கு குறிப்பிடப்படுபவர் 'தமிழீழ தேசியத் தலைவர்' வே.பிரபாகரனின் துணைவியாராவார்)

"மாங்கிளியும் மரங் கொத்தியும்
கூடு திரும்பத் தடையில்லை
நாங்க மட்டும் உலகத்திலே
நாடு திரும்ப முடியல்ல"
*

தமிழ்க் கட்சிகள் மத்தியில் மீண்டுமொருமுறை ஐக்கியத்துக்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஐக்கியம் என்ற வகையில் இது ஒரு வரவேற்கப்பட வேண்டிய நடவடிக்கையாகும். இந்த முயற்சி நீடித்து நிலைக்குமா என்பதையும், அது என்ன இலக்கைக் கொண்டு செயல்படப் போகின்றது என்பதையும், பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

சுதந்திரம் பெற்ற நாள் முதலாக, தமிழர்களின் இரண்டு பிரதான கட்சிகளான தமிழ் காங்கிரசும் தமிழரசுக்கட்சியும் சுமார் கால் நூற்றாண்டு காலம், மக்களின் அபிலாசைகளை புறந்தள்ளி, அரசியல் சுயநலத்துக்காக ஒருவரை ஒருவரை எதிர்த்து பரம வைரிகளாகச் செயற்பட்டு வந்தது தான் வரலாறு. இதன் விளைவாக அவர்கள் மீது மக்கள் நம்பிக்கை இழந்ததுடன், அவர்களது கொள்கைகளும் வங்குரோத்து நிலையை அடைந்ததினால், 1970 பொதுதேர்தலில் அக்கட்சிகளின் பிரதான தலைவர்களான ஜீ.ஜீ.பொன்னம்பலம், அ.அமிர்தலிங்கம், மு.சிவசிதம்பரம், ஈ.எம்.வி.நாகநாதன், மு.ஆலாலசுந்தரம் ஆகியோரை மக்கள் தோல்வியுறச் செய்தனர்.

# தமிழ்க் கட்சிகளின் ஐக்கிய முயற்சியும், கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய வரலாற்றுப் படிப்பினைகளும்

சேவற்கொடியோன்

இந்தத் தோல்வியை ஒரு அபாய எச்சரிக்கையாகக் கருதிய இரண்டு கட்சிகளினதும் தலைவர்கள், அவசர அவசரமாக ஒன்று கூடி, மக்கள் மத்தியில் தமது செல்வாக்கை மீண்டும் நிலைநிறுத்துவதற்காக, தமது பழைய பகைமையை மறந்து ஒன்று சேர்ந்து, புதிதாக 'தமிழர் விடுதலைக்கூட்டணி' என்ற கட்சியை உருவாக்கியதுடன், தமது பழைய செல்லரித்துப்போன கொள்கைகளான ஐம்பதுக்கு ஐம்பது, சமஸ்டி என்பனவற்றைக் கைவிட்டுவிட்டு, 'தனித் தமிழீழ அரசு அமைப்பது' என 1976ல் வட்டுக்கோட்டையில் மாநாடு கூடி முடிவெடுத்தனர். அடுத்து 1977ல் வரவிருந்த பொதுத்தேர்தலில் வெற்றி பெறுவதற்காக எடுத்த அந்த சந்தர்ப்பவாத முடிவையும் கூட, அவர்கள் எதிர்பார்த்த தேர்தல் வெற்றி கிடைத்ததும் கைகழுவியும் விட்டனர்.

ஆனால், தலைவர்களின் வீராவேசப் பேச்சுகளால் உந்தப்பட்ட தமிழ் இளைஞர்கள், தமிழீழம் அமைக்க முடியும் என்ற நப்பாசையில், ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் ஈடுபட்டு, தமக்குள்ளேயே முட்டிமோதி, தம்மைத் தூண்டிவிட்ட தலைவர்கள் மீதும் தமது துப்பாக்கிகளை நீட்டி, போராட்டத்தின் திசையை அழிவுப்பாதைக்கு இட்டுச் சென்றனர்.

இந்தச் சூழ்நிலையில், மற்றைய இயக்கங்களை எல்லாம் தடை செய்த விடுதலைப் புலிகள் அமைப்பு, தமது ஆயுதப் போராட்டத்துக்கு உதவும் பொருட்டு, முன்னர் தம்மால் தடைசெய்யப்பட்டிருந்த சில தமிழ் கட்சிகளுக்குப் புத்துயிர் கொடுத்து, அவற்றைக் கொண்டு 'தமிழ் தேசியக்கூட்டமைப்பு' என்ற புதிய முன்னணியொன்றை உருவாக்கி, பாராளுமன்றத் தேர்தலிலும் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அமோக வெற்றி பெற வைத்தது. இந்தத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழர்களின் வரலாற்றில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் உருவாக்கத்திற்குப் பின்னர் உருவான இரண்டாவது ஐக்கியம் எனவும், பெரிதாகப் பிரச்சாரப்படுத்தப்பட்டதுடன், மாற்றுத் தமிழ் இயக்கங்களைத் 'துரோகிகள்', 'ஒட்டுக்குழுக்கள்', 'அரச கைக்கூலிகள்' எனப் பெயர்கள் சூட்டி, அதன் உறுப்பினர்கள் வகை தொகை இல்லாமல் கொல்லவும் பட்டனர். புலிகளின் இந்தப் பாசிச செயல்பாட்டுக்கு, தமிழ் தேசியக்கூட்டமைப்பு கண்ணை மூடிக்கொண்டு ஆதரவும் வழங்கியது.

ஆனால், 2009 மே மாதம் 18ம் திகதியுடன் புலிகள் முற்றுமுழுதாக அழிக்கப்பட்ட பின்னர், அரசியல் நிலவரங்கள் மாறத் தொடங்கின. புலிகளால் தமிழ்ப் பகுதிகளில் தடைசெய்யப்பட்டிருந்த மாற்றுத் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து, 'தமிழ்க் கட்சிகளின் அரங்கம்' என்ற பெயரில் ஒரு அமைப்பாகச் செயல்படத் தொடங்கின. அவர்களது செயற்பாட்டை அரசாங்கமும், இந்தியாவும், சர்வதேச நாடுகளின் ராஜதந்திர வட்டாரங்களும் ஓரளவு அங்கீகாரம் செய்தன. இதன் பின்னணியில், அதுவரை காலமும் தமிழ் கட்சிகளின் ஐக்கியத்துக்கான கோரிக்கையை உதாசீனம் செய்து வந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பும், தமிழ்க் கட்சிகளின் ஐக்கிய முயற்சியை ஏற்க வேண்டியதாயிற்று.

தமிழ் கட்சிகளின் ஐக்கிய முயற்சி வரவேற்கப்பட வேண்டியதாயினும், இந்தக் கட்சிகளின் கடந்தகாலச் செயற்பாடுகள் காரணமாக, பொதுமக்கள் மத்தியில் சில சந்தேகங்கள் நிலவுவதையும் அவதானிக்க முடிகிறது. முக்கியமாக இனப்பிரச்சினைத் தீர்வில் பிரதான தமிழ்க்கட்சிகள் கடந்த காலங்களில் நடந்து கொண்ட முறை பெரும் கண்டனத்துக்கு உரிய ஒன்றாகும். தமிழ் மக்களுக்கு ஓரளவு நல்லதொரு தீர்வான மாகாணசபையை முன்வைத்த, 1987ல் செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கையை பிரேமதாச அரசு செயற்படாமல் செய்ததிற்கு புலிகள் காரணகர்த்தாக்களாக இருந்தனர். அத்தகைய புலிகளை, தமிழ் தேசியக்கூட்டமைப்பு ஏகப்பிரதிநிதிகாளாக ஏற்றதுடன், மாகாணசபைத் தீர்வும் கூடாத ஒன்று என பின்னர் பிரச்சாரம் செய்தனர். அதேபோல, 2000ம் ஆண்டில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அரசாங்கம் முன்வைத்த, நல்ல தீர்வான இலங்கையை 'பிராந்தியங்களின் ஒன்றியமாக' அமைக்கும், ஓரளவு சமஸ்டி முறையிலான தீர்வை முதலில் ஆதரித்த தமிழர் விடுதலைக்கூட்டணி, பின்னர் புலிகளின் ஆலோசனையைக் கேட்டு, ஐக்கிய தேசியக் கட்சியுடனும், ஜே.வி.பியுடனும் சேர்ந்து அதை எதிர்த்து நடைமுறைப்படுத்த விடாமல் செய்தது.

இன்றும் கூட, ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்று சொல்லிக்கொண்டு, இனவாத ஐ.தே.க. மற்றும் பொன்சேகா – ஜே.வி.பி கூட்டுடன் தமிழ் தேசியக்கூட்டமைப்பு கூடிக்குலாவுகிறது. அத்துடன் தமிழ் தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களாக புலிகளின் விசுவாசிகள் சிலர் இன்னமும் இருக்கின்றனர். அதேபோல தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தினுள்ளும் எம்.கே.சிவாஜிலிங்கம், மனோ கணேசனின் கட்சியினர் போன்ற தீவிர புலி விசுவாசிகள் இருக்கின்றனர். அவர்களும் ஐ.தே.கவுடனும் ஏனைய பேரினவாத சக்திகளுடனும் தொடர்புடையவர்கள் என்பதும் அனைவரும் அறிந்த சங்கதி. எனவே அரசாங்கத்துடன் ஆக்கபூர்வமாக ஒத்துழைத்து, இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டிய விடயத்தில், கடந்த காலங்களைப் போல இவர்கள் குட்டையைக் குழப்பாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஆத்துடன் இந்தக் கட்சிகளில் அங்கம் வகிக்கும் சிலர், கடந்த காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்து, கடந்த தேர்தலில் சந்தர்ப்பம் மறுக்கப்பட்ட அல்லது தோல்வியைத் தழுவிய சிலராகும். இன்னும் சிலர் பல தடவை முயன்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆக முடியாமல் போனவர்கள். இவர்கள் தமது பாராளுமன்ற உறுப்பினராகும் கனவை நிறைவேற்றும் அபிலாசையில், ஐக்கிய முயற்சியில் ஒன்றிணைந்துள்ளனர் என்பது இரகசியமான விடயமல்ல. இவர்கள் இந்த ஐக்கியத்தின் மூலமாக பாராளுமன்ற உறுப்பினர்களாகும் சந்தர்ப்பம் கிடைத்தால், அந்தப் பதவியைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வதற்காக, இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளைக் குழப்பும் நோக்குடன் தீவிர இனவாதம் பேசுவதுதான், இவர்களுடைய முன்னைய கால முன்னோடிகளின் வரலாறு.

எனவே, தமிழ் கட்சிகளின் இந்த ஐக்கிய முயற்சியானது, நேர்மையானதாக, இதய சுத்தியுடனானதாக, தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதை உண்மை நோக்கம் கொண்டதாக இருக்க வேண்டும். அல்லாது போனால் இந்த ஐக்கிய முயற்சியால் எவ்வித பயனும் விளையப் போவதில்லை.

தமிழ் கட்சிகளே! நீங்கள் மலையைக் கெல்லி, பென்னம் பெரிய யானையைப் பிடிக்க வேண்டாம், சின்னஞ்சிறிய எலியைத்தன்னும் பிடியுங்கள் பார்ப்போம்!

*

# மீண்டுமொருமுறை இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் முதுகில் குத்தவும், இதயத்தில் ஈட்டி பாய்ச்சவும் முனையும் ஐ.தே.கவும், ஜே.வி.பியும்!

## தீப்பொறி

தென் ஆசியாவிலேயே மிக முன்னேறிய தொழிலாள வர்க்கமாகத் திகழும் இலங்கைத் தொழிலாளர்களை ஏமாற்றி, அவர்களின் முதுகின் மேல் சவாரி செய்து, பின் அவர்கள் முதுகில் குத்தும் நோக்குடன், ஏகாதிபத்திய சார்பு – தொழிலாளர் விரோத ஐக்கிய தேசியக் கட்சியும் (ஐ.தே.க – UNP)), ஜே.வி.பியும் சம்பளவுயர்வுக் கோரிக்கையை மீண்டுமொருமுறை கையில் எடுத்துள்ளனர்.

இதில் ஐ.தே.க, அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு 10,000 ரூபா சம்பளவுயர்வு கேட்டுள்ளதுடன், அதேதொகையை தனியார் துறை ஊழியர்களுக்கும் கோரியுள்ளது. அதேபோல ஜே.வி.பியும் (JVP) அரச ஊழியர்களுக்கு 8,000 ரூபா சம்பளவுயர்வைக் கோரியுள்ளது.

உண்மையில் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கையின் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் சம்பளவுயர்வு உடனடித் தேவையென்பது, மறுக்க முடியாத ஓர் அடிப்படை மனிதாபிமானக் கோரிக்கையாகும். பின் ஏன் ஐ.தே.கவினதும், ஜே.வி.பியினதும் சம்பளவுயர்வுக் கோரிக்கைகளை நாம் சிலாகிக்க வேண்டும் என்ற கேள்வி சிலருக்கு எழலாம். ஏனெனில் கடந்தகால வரலாற்றை எடுத்து நோக்குகையில், இந்த இரு கட்சிகளுமே அரச ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளவுயர்வுக் கோரிக்கையைக் கூட ஏற்கவில்லை என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

1980ல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐ.தே.க தலைமையிலான ஆட்சியில் (அதில் இன்றைய ஐ.தே.கவின் தலைவரும் ஜே.ஆரின் மருமகனுமாகிய ரணில் விக்கிரமசிங்க ஒரு முக்கிய அமைச்சராக இருந்தார்) வெறுமனே 300 ரூபா சம்பளவுயர்வு கேட்டு வேலை நிறுத்தத்தில் குதித்த போது, எந்தவிதமான தொழிலாளர் மற்றும் மனிதாபிமானச் சட்டங்களுக்கும் மதிப்பளிக்காமல், அவர்களில் 40,000 இற்கும் மேற்பட்டோரைப் பணி நீக்கம் செய்து பழிவாங்கி நடுத்தெருவில் நிறுத்தியது.

அவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்டவர்களில் 25க்கும் மேற்பட்டோர் வாழ வழியில்லாமல், தமது குழந்தைகளின் பசியைப் போக்க வக்கில்லாமல் தற்கொலை செய்து கொண்டனர். இன்னும் சிலர் இந்த அதிர்ச்சியினால் இருதய தாக்கம், பாரிசவாதம் போன்ற கடும் நோய்களின் தாக்குதலுக்குள்ளானார்கள். சில தொழிற்சங்க தலைவர்கள் 1980 முதல் 1990 வரை 10 ஆண்டுகள் நீடித்த அரசியல் பழிவாங்கல் காரணமாக வேலையை இழந்து, அந்தத் துன்பத்தால் வறுமையிலும் நோயிலும் வாடி இளம் வயதிலேயே மரணித்துப் போனார்கள். இதில் சில குடும்பங்களில் கணவனும் மனைவியும் ஏக காலத்தில் பாதிப்புக்குள்ளானார்கள். இவ்வாறு பத்து வருடங்களுக்கு மேலாக (ஆசிரிய) தொழிற்சங்க தலைவர்களுக்கு கொடுமை இழைத்தவர்களில் மிக முக்கியமானவர் அன்று கல்வி அமைச்சராக இருந்த, இன்றைய ஐ.தே.க தலைவரான ரணில் விக்கிரமசிங்க என்பது குறிப்பிடத்தக்கது.

மறுபக்கத்தில், அரச ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளவுயர்வுக் கோரிக்கையைக் கூட ஆதரிக்க முன்வராத ஜே.வி.பி (பயங்கரவாத) தலைமை, அன்றைய வேலைநிறுத்தத்தை உறுதியாக முன்னின்று வழி நடாத்திய தொழிற்சங்கத் தலைவர்களைக் கொல்லவும் முயன்றனர். (லங்கா தொழிற்சங்கங்களின் சம்மேளனத் தலைவர்களில் ஒருவரான எல்.டபிள்யூ.பண்டிதவை ஜே.வி.பியே கொலை செய்தது) இங்கு நீங்கள் ஒரு முக்கியமான விடயத்தைக் கவனிக்க வேண்டும். அது என்னவெனில், இன்று தொழிலாளி வர்க்கத்திற்காகப் போராட்டம் என்ற பெயரில் அரச எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் ஜே.வி.பி தலைமையும், அதன் தொழிற்சங்கத் தலைமையும், அன்றைய ஐ.தே.க ஆட்சிக்காலத்தில் எந்தவொரு போராட்டத்திலும் ஈடுபடாமல் இருந்தது மட்டுமின்றி, தொழிலாளர்களின் போராட்டங்களைக் காட்டிக்கொடுத்தும் வந்துள்ளனர். அதற்கு 1980 பொது வேலை நிறுத்தம் ஒரு சிறந்த உதாரணமாகும்.

ஜே.வி.பி போன்றே, 1980ல் ஐ.தே.க ஆட்சியின் போது நடைபெற்ற 300 ரூபா சம்பளவுயர்வுப் போராட்டத்தை முறியடிக்கத் துணை போனவர்களில், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் (TULF) முக்கிய பங்குண்டு. இன வேறுபாடு இன்றி அனைத்து அரச ஊழியர்களுக்குமான அந்த வேலை நிறுத்தத்திலிருந்து, தமிழ் அரச ஊழியர்களைப் பிரித்து வைப்பதற்காக, அன்றைய ஐ.தே.க அரசுடன் கூடிக்குலாவிய தமிழர் விடுதலைக் கூட்டணி அன்று சொன்ன நொண்டிச்சாக்கு என்னவென்றால், ''எமது போராட்டம் தற்போதைக்கு தமிழர்களின் விடுதலை சம்பந்தமானதேயொழிய, இந்த (சிங்களத்) தொழிலாளர்களின் போராட்டத்துக்கும் எமக்கும் எவ்வித சம்பந்தம் இல்லை'' என்பதாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மொழிவழித் தொழிற்சங்கங்களில் ஒன்றான தமிழர் ஆசிரியர் சங்கம், தமது இன்னொரு சகோதரச் சங்கமான தமிழ் அரசாங்க எழுதுவினைஞர் சங்க ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வேலை இழந்து நிற்க, யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த பிரதிக் கல்வி அமைச்சருக்கு விருந்துபசாரம் நடாத்தியதுடன், சக ஊழியர்களுக்கு துரோகமிழைத்து, வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களின் அலுவலக வேலைகளையும் தாமே செய்து கருங்காலித்தனம் செய்தனர். எனவே இன்றும் கூட, இந்த தொழிலாளர் விரோத, மக்கள் விரோத ஐ.தே.க, ஜே.வி.பி கட்சிகளும், அவர்களுடன் கள்ளக்கூட்டு சேர்ந்துள்ள நவ சமசமாஜக்கட்சி, தமிழ் தேசியக்கூட்டமைப்பு என்பனவும், தொழிலாளர்கள் சார்பாக சம்பளவுயர்வுக் கோரிக்கையை எழுப்புவது, அரசியல் உள் நோக்கம் கருதியதே அல்லாமல், உழைக்கும் மக்களுக்காகவல்ல என்பதை, தொழிலாளி வர்க்கமும் அனைத்து உழகைக்கும் மக்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

1980 வேலைநிறுத்தத்தின் தோல்விக்கு, ஐ.தே.க அரசின் கொடூரமான தொழிலாளர் விரோதப்போக்கு பிரதான காரணமெனினும், அதுமட்டும் காரணியல்ல. தொழிலாளர் வர்க்கம் மத்தியிலிருந்த கருங்காலிகளும் காரணமாகும். போதிய தயாரிப்பு இல்லாமல் அவசர குடுக்கைத்தனமாக இந்த வேலைநிறுத்தத்தை மேற்கொண்டமைக்கு, நவ சமசமாஜக் கட்சியின் கட்டுப்பாட்டிலிருந்த புகையிரதத் தொழிற்சங்கமும் ஒரு காரணமாகும். அவசரமாக வேலைநிறுத்தத்தை ஆரம்பித்த அவர்கள், ஏனைய துறை ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கிக் கொண்டிருக்கையில், யாழ்ப்பாணத்தில் அவர்களது புகையிரத தொழிற்சங்க ஊழியர்கள் அனைவரும் வேலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர்.

இந்த வேலை நிறுத்தம் குறித்து, மிகவும் அனுபவம் வாய்ந்த தொழிற்சங்க தலைவரும், கம்யூனிஸ்ட் தலைவருமான தோழர் வி.ஏ.கந்தசாமியிடம் அபிப்பிராயம் கேட்ட பொழுது, ''நாங்கள் இலங்கையை முற்றிலுமாக ஸ்தம்பிக்க வைத்த 1953 ஆகஸ்ட் 12 மாபெரும் ஹர்த்தால் போராட்டத்தின் போது, அதை வெற்றிகரமாக நடாத்துவதற்காக யாழ்ப்பாணத்தில் மட்டும் சுமார் 200 தயாரிப்புக் கூட்டங்களை நடாத்தினோம். எனவே இவ்விடயத்தில் அவசரப்படாமல் யோசித்து முடிவெடுங்கள்'' என அறிவுரை கூறினார். அவரது கூற்றின் தாற்பரியத்தை, 1980 வேலைநிறுதத்தின் தோல்வி பின்னர் நிரூபித்தது.

1980 பொது வேலைநிறுத்ததில் வடபகுதி தொழிலாளர்களை அணிதிரட்டுவதில், அன்று அங்கு துடிப்புடன் இயங்கிக் கொண்டிருந்த தொழிற்சங்கக் கூட்டுக்குழுவுக்கும், அதன் முக்கிய தலைவர்களான கம்யூனிஸ்ட் கட்சி வட பிரதேசச் செயலாளர் தோழர் சி .விஜயானந்தன் மற்றும் நவ சமசமாஜக்கட்சி வட பிரதேசச் செயலாளர் தோழர் ஆ.க.அண்ணாமலை ஆகியோருக்கும் முக்கிய பங்குண்டு.

## கலந்துரையாடல்

2010 டிசம்பர் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை, கனடியத் தமிழர் ஜனநாயக விழிப்புணர்வு மன்றம், ''இலங்கையின் இன்றைய அரசியல் நிலவரமும், தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும்'' என்ற தலைப்பில், கலந்துரையாடல் ஒன்றை, கனடாவின் ஸ்காபரோ நகரில் நடாத்தியது. கலந்துரையாடலில் கலந்து கொண்டு பேசிய பலரும், ஆக்கபூர்வமான பல கருத்துகளை முன்வைத்தனர். முடிவில் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமாக சில குறிப்பிட்ட ஆலோசனைகளை முன்வைத்து, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் கட்சிகளின் அரங்கம் என்பனவற்றுக்கும், கனடாவில் வாழ்கின்ற தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனநாயக அமைப்புகளின் சார்பாக மகஜர்கள் அனுப்பி வைப்பது என ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

இந்த தொழிற்சங்கக் கூட்டுக்குழு, ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஐ.தே.க அரசு மேற்கொண்ட தமிழ் மக்களுக்கு எதிரான இராணுவ ஒடுக்கு முறைகளுக்கு எதிரான போராட்டத்திலும் முக்கிய பங்கு வகித்தது. அதன் காரணமாகவே அதிகார வெறி பிடித்த புலிப் பாசிஸ்ட்டுகள் இவர்கள் இருவரையும் பின்னர் சுட்டுப் படுகொலை செய்தனர்.

அதேவேளையில் இன்றைய வாழ்க்கைச் செலவைச் சமாளிப்பதற்காக உழைக்கும் மக்கள் முன்வைக்கும் நியாயமான சம்பளவுயர்வுக் கோரிக்கையை வழங்கும்படி அரசையும், முதலாளித்துவக் கம்பனிகளையும் நாம் வலியுறுத்த வேண்டும். இன்றைய அரசும் அதன் தலைவரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும், ஏகாதிபத்திய சார்பு ஐ.தே.கவை தேர்தல்களில் தோற்கடித்தும், இன்னொரு ஏகாதிபத்திய வளர்ப்புப் பிராணியான பாசிச புலிகளை யுத்த முனையில் தோற்கடித்தும், எமது தாய்நாட்டைப் பாதுகாத்ததுடன், தொடர்ந்து ஏகாதிபத்திய சக்திகள் இலங்கை மக்களுக்கு எதிராக மேற்கொண்டு வருகின்ற சதி, சீர்குலைவு மற்றும் நாசகாரச் செயல்களையும் தீரத்துடன் எதிர்த்துப் போராடி வருகின்றனர். அதில் இலங்கையின் அனைத்து மக்களும் பங்கேற்பதானால், உழைக்கும் மக்களின் நியாயமான பொருளாதாரக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதுடன், சிறுபான்மை தேசிய இனங்களின் உரிமைகள் வழங்கப்பட்டு அவர்களும் தேசிய நீரோட்டத்தில் இணைக்கப்பட வேண்டும்

இந்தக் கடமைகளை இன்றைய அரசு சரியாக நிறைவேற்றுவதின் மூலமே, மக்களின் பெயரால் பிற்போக்கு சக்திகள் மேற்கொண்டு வரும் அரசியல் உள் நோக்கம் கொண்ட நடவடிக்கைகளை ஒரு முடிவுக்குக் கொண்டு வரலாம்.
*

---

# சீனா ஒருபோதும் வல்லரசு மேலாதிக்கத்தை நாடாது!
## கொழும்புக்கான சீனத் தூதுவர் உரை

2010 ஒக்ரோபர் 01ந் திகதி, மக்கள் சீனக் குடியரசின் 61வது தேசிய தினத்தையொட்டி, கூட்டமொன்றை இலங்கை - சீன நட்புறவுச் சங்கம் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்தது. அக்கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இலங்கைக்கான சீன தூதுவர் யாங் ஸியுபிங், சீனா பற்றி இன்று உலகில் எழுப்பப்பட்டு வரும் பல கேள்விகளுக்கு விடையிறுக்கும் வகையில், சில கருத்துகளைத் தெரிவித்தார். அதன் முக்கிய சில பகுதிகள் வருமாறு:

“சோசலிச சமத்துவத்தின் ஆரம்பக் கட்டத்திலேயே சீனா இன்னமும் உள்ளதுடன், தொடர்ந்தும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடாகவும் இருக்கின்றது. சீனாவின் மொத்த தேசிய உற்பத்தித் தலா வருமானம், சமீபத்தில் தான் 3000 அமெரிக்க டொலர்கள் என்ற இலக்கைத் தாண்டியுள்ளது. இதன்படி, அது உலகளவில் 104வது இடத்திலேயே காணப்படுகின்றது. சமச்சீரற்ற வளர்ச்சியானது மிக முக்கிய பிரச்சினைகளிலொன்றாக அமைந்துள்ளது. பல கிராமப்புறங்களும், தூரப் பிரதேசங்களும் இன்னமும் வறுமை மிக்கனவாகவே காணப்படுகின்றன. 135 மில்லியன் மக்கள் இன்னமும் நாளொன்றுக்கு ஒரு டொலருக்கும் குறைவான வருமானம் பெறுபவர்களாகவே இருக்கின்றனர். சீனா உண்மையான அபிவிருத்தியையும், முன்னேற்றத்தையும் அடைவதற்கு, பல தசாப்தங்களிற்கு, பத்துக்கும் மேற்பட்ட சந்ததியினரின் கடுமையான முயற்சிகள் அவசியமானதாகும்.

அபிவிருத்தியென்பது, சீனா தேர்ந்தெடுத்துள்ள உபாயத் தெரிவாகும். சுமாதான அபிவிருத்தி என்ற பாதையில் சீன மக்கள் தம்மைத் தொடர்ந்தும் அர்ப்பணித்திருப்பர். சீனாவின் அபிவிருத்தி யாரையும் புண்படுத்தவோ, அன்றேல் அச்சுறுத்தவோ மாட்டாது. வளர்ச்சி பெற்றதும் ஆதிக்கத்தை நாடிய பெரும் வல்லரசுகளின் பாதையை சீனா ஒருபோதுமே பின்பற்ற மாட்டாது. சீனா எவ்வளவுக்கு எவ்வளவு அபிவிருத்தி காண்கின்றதோ, அவ்வளவிற்கு அவ்வளவு சர்வதேசப் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளும். ஏனையவர்களின் நலன்களை விலை கொடுத்து, தனது சுயநலனை சீனா ஒருபோதுமே முன்னெடுக்கமாட்டாது. சீனாவின் அபிவிருத்திக்கு நீண்டகால ஸ்திரமான சர்வதேசச் சூழல் அவசியமானது. இலங்கை உட்பட அண்டை நாடுகளுடன் சிறப்பான அயலக நட்புறவையும், ஒத்துழைப்பையும் கட்டியெழுப்புகின்ற கொள்கையை சீனா தொடர்ந்தும் பின்பற்றும்”

இவ்வாறு சீனத் தூதுவர் தமது உரையின் போது குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் 1974 ஜனவரியில் நடந்த நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டின் 37வது ஆண்டு நினைவாக

# *உலகத் தமிழாராய்ச்சி மாநாடு - பின்னணியும் பின்நோக்கும்*

**வாமனன்**

**கீ**ழைத்தேசங்களைப் பற்றியும், அதன் வரலாறு, மொழி, இலக்கியம், சமயங்கள், கலைகள் முதலியன பற்றியும், மேல்நாட்டு அறிஞர்கள் பலர் சிறப்பாக ஆராய்ந்துள்ளனர் என்னும் கருத்து பலரிடையே ஆழமாக வேரூன்றியுள்ளது. இக்கருத்து முற்றுமுழுதாக உண்மையல்லவெனினும், சிற்சில துறைகளில், 'விஞ்ஞானபூர்வமான' ஆய்வுகளை மேல்நாட்டு கல்விமான்கள் சிலர் நடத்தியுள்ளனர் என்பதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதே. இன்று, சோசலிச நாடுகள் சிலவற்றிலும், ஆசிய – ஆபிரிக்க கலை இலக்கியங்கள் குறித்து சில பல கனமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆயினும் ஆரம்பத்திலிருந்தே ஒரு விசயம் தெளிவாயிருந்து வந்துள்ளது. மேலைத்தேசங்கள் "உலகையாண்ட" காலத்திலேயே, அந்நாடுகளில் கீழைத்தேய ஆராய்ச்சிகள் தொடங்கப் பெற்றன. விசித்திரமான விசயங்களைக் கற்க விரும்பும் ஒரு சிலர் எல்லாக் காலத்திலும், எல்லா நாடுகளிலும் இருக்கிறார்கள். மேல்நாடுகளிலும் அத்தகைய "பைத்தியங்கள்" சில, சமஸ்கிருதம், தமிழ், இந்தி, யப்பானிய மொழி போன்ற அயல் மொழிகளையும், இலக்கிய இலக்கணங்களையும், கற்பதில் பெருங்காதல் கொண்டிருந்தனர். ஆனால் கீழைத்தேயங்கள் சம்பந்தமான ஆய்வுகளில் ஈடுபட்டோரிற் பெரும்பாலானோர், ஏதோ ஒரு வகையில் மேல்நாட்டு அரசாங்கங்களுடன் நெருங்கிய தொடர்புடையோராயும், அவற்றின் ஆதரவை வேண்டி நின்றோராயும் இருந்தனர்.

இலங்கைத் தமிழர்களின் பெயரால், கடந்த கால் நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக நடாத்தப்பட்டு வந்த தமிழீழ தனியரசுக்கான போராட்டம், அப்போராட்டத்தின் தவறான குறிக்கோள், போராட்ட வழிமுறை என்பனவற்றின் காரணமாக, 2009ம் ஆண்டு மே மாதம் 18 திகதி முல்லைத்தீவு வெள்ளாம் முள்ளிவாய்க்காலில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட இறுதி இராணுவ நடவடிக்கை காரணமாக முடிவுக்கு வந்தது.

இந்த தனிநாடு போராட்டம் ஆரம்பமாவதற்கு ஊக்குவித்த இரண்டு காரணிகளில் ஒன்றாக இன்று வரை பேசப்பட்டு வருவது, 1974 ஜனவரியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்ச்சிகளின் போது ஏற்பட்ட அசம்பாவிதங்களும், அதனால் ஏற்பட்ட ஒன்பது பேரின் உயிரிழப்புகளுமாகும். (மற்றைய காரணி எனக் கூறப்படுவது, 1970ல் அப்போதைய மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் தமிழ் மாணவர்களின் கல்வியில் ஏற்படுத்திய தரப்படுத்தல் முறை)

இந்த மாநாட்டு நிகழ்வுகள் குறித்து இதுவரை பல நூற்றுக்கணக்கான கட்டுரைகளும், ஆய்வுகளும் வெளிவந்துவிட்டன. அவற்றில் பல அரசியல் நோக்கங்களுக்காக பாதி உண்மைகளும் பாதி பொய்களும் கலந்தே எழுதப்பட்டுள்ளன. இந்தச் சம்பவத்தில் நேரடியாகப் பங்குபற்றியவர்கள் சிலர் தெரிவித்த, பக்கச்சார்பற்ற உண்மைத் தகவல்களை பிரதான தமிழ் ஊடகங்கள் ஒருபோதும் பிரசுரித்ததுமில்லை.

அந்த மாநாட்டை அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தி, எதிர்காலத்தில் தமிழ் பிரதேசங்களில் காட்டாறாக ஓடவிருந்த இரத்த வெள்ளத்துக்கு கால் கோள் இட்டவர்களில் பிரதானமானவர், 1970 பொதுத்தேர்தலில் தனது வட்டுக்கோட்டைத் தொகுதியில் தோல்வியைத் தழுவி விரக்தியில் இருந்த அ.அமிர்தலிங்கம் என்பது, வரலாற்றின் அழியாப் பக்கங்களில் இடம் பெற்றுவிட்ட ஒரு உண்மையாகும்.

இந்த மாநாட்டைப் பற்றியும், அதை நடாத்திய தமிழாராய்ச்சி மன்றத்தின் பின்னணி பற்றியும், கிளிநொச்சி மக்கள் கலாச்சாரப் பேரவை, அந்தக்காலகட்டத்தில் வெளியிட்டு வந்த 'களனி' என்ற கலை இலக்கிய அறிவியல் காலாண்டு சஞ்சிகையில், பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் 'வாமனன்' என்ற புனைபெயரில் எழுதிய 'உலகத் தமிழாராய்ச்சி மாநாடு – பின்னணியும் பின்நோக்கும்' என்ற சிறப்புக் கட்டுரையையும், அந்த மாநாட்டு சம்பவங்கள் சம்பந்தமாக 'களனி' யின் ஆசிரிய தலையங்கத்தையும், அம்மாநாடு சம்பந்தமாக இரா.ஜனார்த்னம் விடுத்த பொய்யறிக்கையை தோலுரித்த 'வீரகேசரி' ஆசிரிய தலையங்கத்தின் ஒரு பகுதியையும் வாசகர்கள் தெரிந்து கொள்வதற்காகக் கீழே நன்றியுடன் மறுபிரசுரம் செய்கின்றோம்.

தமிழீழத்தை வலியுறுத்தி தமிழர் விடுதலைக்கூட்டணி 1976ல் வட்டுக்கோட்டையில் தீர்மானம் நிறைவேற்றுவதற்கு முன்பாகவும், அந்த நோக்கத்துக்காக தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திய போராட்டத்தில் ஈடுபடுவதற்கு முன்பாகவும், பேராசிரியர் க.கைலாசபதி இந்தக் கட்டுரையை எழுதினார் என்பதும், அவரும் அவருடன் நெருங்கிச் செயல்பட்ட முற்போக்கு கலை இலக்கியவாதிகளும் தமிழீழத்துக்கான பிற்போக்குப் போராட்டம் குறித்து முன்கூட்டியே எத்தகைய தீர்க்கதரிசனமான கருத்துக்களைக் கொண்டிருந்தனர் என்பதும், பேராசிரியரது கட்டுரையையும், 'களனி' ஆசிரிய தலையங்கத்தையும் வாசிப்பவர்களுக்குப் புலனாகும்.

பேராசிரியர் துூரதிஸ்டவசமாக 1978ல் மரணிக்காது இன்றும் உயிர் வாழ்ந்திருந்தால், பல போலி 'முற்போக்கு' பேராசிரியர்கள் போல் சந்தர்ப்பவாதிகளாகவும், புலிகளின் தேசிய பாசிசத்தை 'விடுதலைப்போராட்டம்' எனச் சாக்கப்போக்குச் சொல்லி ஆதரிப்பவர்களாகவும் அல்லாமல், தான் கொண்ட சரியான மாக்சிச – லெனினிச கொள்கையில் உறுதியாக இருந்திருப்பார் என்பதற்கும், இக்கட்டுரைகள் சான்றுகளாக இருக்கின்றன.

இன்று உண்மையான தமிழ் மார்க்சியவாதிகளின் அரசியல் ஆசானாக, பேராசிரியர் க.கைலாசபதியின் பாடசாலை மற்றும் அரசியல் குருவான மு.கார்த்திகேசன் திகழ்வதும், முற்போக்கு கலை இலக்கியகர்த்தாக்களின் ஆதர்ச ஜம்பவானாக, மு.கார்த்திகேசன் அவர்களின் பெறுமதிமிக்க மாணவர்களில் ஒருவரான பேராசிரியர் க.கைலாசபதி திகழ்வதும், வரலாறு நிகழ்த்தியுள்ள அற்புதங்களில் ஒன்றாகக் கருதப்பட வேண்டியவையாகும்.

**ஆசிரியர் குழு**

பிரித்தானியர், பிரெஞ்சுக்காரர் முதலியோர் தாம் ஆண்ட நாடுகளில், தமக்கு உதவக்கூடிய வகையிலேயே, இத்தகைய ஆய்வுகளைப் பிரதானமாக நடத்துவித்தனர். தொடக்கத்திலேயே விவிலிய வேதத்தைப் பரப்புவதற்காகக் கற்கப்பட்ட கீழைத்தேய மொழிகள், பின்னர் அவற்றைப் பயன்படுத்தி ஆராய்ச்சியாளர் பரம்பரை ஒன்றை உருவாக்குவதற்காகப் பயன்பட்டன. கீழைத்தேய சமுதாயங்களின் வரலாறு, சமூக அமைப்பு, நம்பிக்கைகள், முதலியவற்றை ஆராய்ந்து, மேல்நாட்டு ஆய்வாளர்கள் அவற்றின் மீதுள்ள பற்றினால் மட்டும் அப்படிக் கற்கவில்லை. அவர்களது வெளிநாட்டு அமைச்சுக்கும், நிர்வாகிகளுக்கும் பிரயோசனப்படும் வகையிலேயே, தமது ஆய்வுகளை மேற்கொண்டனர். இலண்டன் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்ட கீழைத்தேய – ஆபிரிக்கக் கல்லூரி இத்தகையதொன்றேயாகும். அக்கல்லூரியில் தமிழ் கற்ற பல ஆங்கிலேயர், அக்காலத்தில் நிர்வாகிகளாயும், யுத்த காலத்தில் ஒற்றர்களாயும், பல்வேறு சதிகளைத் தீட்டுபவர்களாயும் பணிபுரிந்து வந்திருக்கின்றனர். இன்றும் அக்கல்லூரியின் தமிழ் பகுதிக்கும், பிரிட்டிஸ் வெளிவிவகார அமைச்சிற்கும் நெருங்கிய தொடர்புகள் உண்டு.

இரண்டாவது உலகப் போருக்குப் பின், பிரிட்டன் வல்லரசு அந்தஸ்தை இழந்து, குடியேற்ற நாடுகளில் நேரடியான ஆட்சிச் செல்வாக்கைக் கைவிட்ட பொழுது, தொடர்ந்து பெருமளவில் கீழைத்தேய ஆராய்ச்சி செய்ய வேண்டிய அவசியம் இல்லாது போயிற்று. பல்கலைக்கழகங்களில் குறைந்தபட்ச தேவைகளுக்காகவும், பிரிட்டனின் வர்த்தகத் தேவைகளுக்காகவும், கீழைத்தேய ஆய்வுகள் தேவைப்பட்டனவேயன்றி, முன்னர் போல் "உலகை ஆள்வதற்காக" அவை அவசியமாய் இருக்கவில்லை.

கடந்த பத்துப்பதினைந்து வருட காலத்தில், ஆசிய நாடுகள் பற்றிய ஆய்வுகளை விட, ஆபிரிக்க நாடுகள் பற்றிய ஆய்வுகளே பிரிட்டிஸ் பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இதற்குக் காரணம், அந்தக் கண்டத்திலேயே இப்பொழுது பிரிட்டனின் அக்கறைகள் (கூடுதலான முதலீடு, ஏற்றுமதி, செல்வாக்கு) உள்ளன. அதாவது ஒரு வரியில் சொல்வதானால், மேலைத்தேய நாடுகளின் அரசியல் - பொருளாதார – ராஜதந்திர தேவைகளுக்கு ஏற்பவே அங்கெல்லாம் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வந்திருக்கின்றன.

இந்த வரலாற்றுப் பின்னணியிலேயே, இரண்டாவது உலகப் போருக்குப் பின், அமெரிக்கா அதிகம் அதிகமாக கீழைத்தேய ஆராய்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கத் தொடங்கியது. பிரிட்டன், பிரான்ஸ், ஒல்லாந்து முதலிய குடியேற்ற நாடுகள், இரண்டாவது உலகப் போருக்குப் பின், பலங்குன்றி மெல்ல மெல்ல சுருங்கிப் பின்வாங்கத் தொடங்கிய வேளையில், அவற்றின் ஸ்தானத்தை அமெரிக்கா பிடித்துக் கொண்டது. இன்று, பிரெஞ்சுக்காரர் ஆண்ட இந்தோ சீனத்திலும், டச்சுக்காரர் ஆண்ட இந்தோனேசியாவிலும், அமெரிக்க ஏகாதிபத்தியமே பெருஞ் செல்வாக்குடன் அந்நாடுகளின் பொருளாதாரத்தை சுரண்டுவதை நோக்குவோர்க்கு, ஐரோப்பிய காலனித்துவத்தை அமெரிக்கக் காலனித்துவம் பொறுப்பேற்றுக் கொண்டமை புலனாகும். **(இதில் சோவியத் யூனியனும் அண்மைக் காலங்களில் பங்கு போட முனைகிறது)**

அரசியல், பொருளாதார, ராஜதந்திர, இராணுவத் துறைகளில், கீழைத்தேயங்கள் பலவற்றில் அமெரிக்கா ஊடுருவல் செய்ததையொட்டிப் பற்பல புதிய கலாசார நிறுவனங்கள் தோன்றின: தோற்றுவிக்கப்பட்டன. வெளித்தோற்றத்துக்கு, ஆபத்தற்ற, தூய கலாசார விசயங்களைத் தழுவிய விசயங்களையே ஆராய்கின்ற பல கழகங்கள் எழுந்தன. சிலவற்றை அமெரிக்கரே நேரடியாக நடத்தினர். தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா போன்ற நாடுகளில் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களின் ஆதரவிலே பல நூதன ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில், இலங்கையர் மூலம் சில ஸ்தாபனங்கள் நடத்தப்பட்டன. உதாரணமாக, இப்பொழுது காலாவதியாகிவிட்ட **ஸமான் பிரசுராலயம்**, ஒரு காலத்தில் இலங்கையில் ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் ஆதரவில் இயங்கியது பலரும் அறிந்த செய்தியாகும்.

இவ்வாறு அமெரிக்கச் செல்வாக்கில், பெருந்திட்டத்துடன், ஆசிய – ஐரோப்பிய ''கல்வியாளர்'' உதவியுடன் ஆரம்பிக்கப் பெற்றதே அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம். தென்கிழக்காசிய நாடுகள் சிலவற்றில் தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்றமையாலும், அவர்களுக்கு ''சிறுபான்மையினர்'' பிரச்சினைகள் இருப்பதனாலும், அவர்கள் மத்தியில் ஊடுருவி வேலை செய்யப் போதிய வாய்ப்பு ஏற்படும் என்றெண்ணி, அமெரிக்க ஆசிய ஆராய்ச்சிக் கழகத்தின் பங்குபற்றலுடன் நெறிப்படுத்தப்பட்டதே அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம். அமெரிக்க ஆதரவு இருந்து வந்ததினால், இம்மன்றத்துக்கு என்றுமே நிதிப் பிரச்சினை இருந்ததில்லை.

அடிப்படையில், தென்னிந்தியாவிலே திராவிடக் கழக இயக்கம், தமிழரசுக்கழகம், நாம் தமிழர் இயக்கம் முதலியவற்றின் விளைவாகப் பொதுவாக மக்கள் மத்தியில் காணப்படும் மொழி உணர்ச்சிக்குத் தூபம் போட்டு, அதை அதிகப்படுத்தி, சர்வதேசத் தொடர்புகளை ஏற்படுத்தி, அதன் மூலம் அங்கு பிரிவினைச் சக்திகளுக்கும், பிற்போக்குச் சக்திகளுக்கும் வலுவூட்டுவதே, அமெரிகர்களின் தந்திரோபாயங்களில் ஒன்றாகும். இவற்றைச் சாதிப்பதற்குத் திரையிட்டு மறைக்கக்கூடிய ''ஆராய்ச்சி'' நிறுவனமாகப் பயன்படுத்தப்பட்டதே, அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மன்றம்.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை போன்ற தேசங்களிலும் மற்றும் பல்வேறு நாடுகளிலும், தேசிய ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய அத்தனையையும் ஏகாதிபத்தியம் செய்து வந்துள்ளது: வருகிறது. Divide and Rule, ''பிரித்தாள்'' என்பது, பிரித்தானியர் வெகு திறமையாயும், நுட்பமாயும் கையாண்ட ஆட்சி உபாயம். இந்தியாவிலே, இந்து – முஸ்லீம், ஆரியர் – திராவிடர், பிராமணர் – தாழ்த்தப்பட்டோர் என்றும், இலங்கையில் தமிழர் – சிங்களவர், இந்துக்கள் - பௌத்தர், பௌத்தர்கள் - கிறிஸ்தவர்கள், மலைநாட்டுச் சிங்களவர் – சமநிலச் சிங்களவர் என்றெல்லாம், பாகுபாடுகளையும், பேதங்களையும் ஏற்படுத்திய அந்நியர், மக்கள் ஒற்றுமைப்பட்டு, ஜனநாயகத்துக்கும், சோசலிசத்துக்கும் போராடுவதைத் தடுக்க முயன்றனர்.

**‘களனி’ 1974 சித்திரை – ஆனி இதழின் ஆசிரிய தலையங்கம்**

## தமிழாராய்ச்சி மாநாட்டுச் சம்பவங்கள்

நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு நடந்து முடிந்து இரண்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டன. மாநாட்டின் இறுதி நாள் நிகழ்ச்சிகளின் போது ஏற்பட்ட பொலிஸ் தாக்குதல் பற்றியும், உயிர்ச்சேதங்கள் பற்றியும் விசாரணைகள் நடந்துள்ளன. பல அறிக்கைகள் வெளிவந்துள்ளன. பல்வேறு அபிபிபிராயங்கள் நிலவுகின்றன. மாநாட்டுச் சம்பவங்களைப் பாவித்து பயனடைவதில் பல்வேறு அரசியல் சக்திகள் முயன்றுள்ளன.

எம்மைப் பொறுத்த வரையில் நிராயுதபாணியான மக்கள் மீது பொலிஸ் நடாத்திய மிருகத்தனமான தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எமது அனுதாபத்தை இதயபூர்வமாகத் தெரிவித்துக் கொள்கின்றோம். அதேவேளையில், மாநாடு ஆரம்பமாவதற்கு முன், கிளிநொச்சி மக்கள் கலாச்சாரப் பேரவை விடுத்த அறிக்கையை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். ‘‘இம்மாநாட்டை பிற்போக்கு நோக்கங்களுக்குப் பாவிப்பதற்கு அந்நிய, உள்நாட்டுப் பிரிவினைவாத, பிற்போக்கு சக்திகள் முயன்று வந்துள்ளதுடன், அதில் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளனர். தமிழ் மக்களின் மொழி, இன உரிமைகள் தீர்க்கப்படாத வரை, பிரிவினைச் சக்திகள் மக்களைப் பகடைக்காய்களாக உபயோகிப்பார்கள் என்பது நிச்சயம். எனவே தமிழ் மக்களின் நியாயமான மொழி, இனப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதின் மூலம், பிரிவினை சக்திகளை எமது மண்ணிலிருந்து ஒழித்துக்கட்ட முடியும்’’.

எனவே பொதுமக்கள் மீது தாக்குதல் நடாத்திய பொலிஸ் மீது விசாரணை நடாத்தி தகுந்த நடவடிக்கை எடுப்பதுடன், இனிமேலும் இந்த மாதிரியான நிலைமைகள் ஏற்படாது தடுப்பது அரசாங்கத்தின் கடமையாகும். அதேவேளையில், பிரிவினைச் சக்திகளை கட்டுப்படுத்தி மக்களைப் பாதுகாக்க வேண்டிதும் அவசியமாகும்.

இதற்கான பல்வகைப்பட்ட சதிகார ஸ்தாபனங்களில் ஒன்றுதான், அண்மைக்காலத்தில் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் என்னும் பெயரில், இந்தியா, இலங்கை, மலேசியா, மொரிசஸ், பிஜித்தீவு முதலிய தேசங்களில் தமிழ் மக்கள் பலரைக் கொண்டு நடாத்தப்படும் கழகம்.

இனம், மொழி, மதம் முதலிய உணர்ச்சிக்குரிய விசயங்களில், ‘‘ஆராய்ச்சி’’ என்ற பெயரில் மோசமான, விபரீதமான கருத்துக்களைத் தூவுவதும், தனிநாடு, சுயாட்சி என்ற எண்ணங்களைத் தூண்டுவதும், இம்மன்றத்தின் தலையாய குறிக்கோள்களில் ஒன்றாக இருந்து வந்திருக்கின்றது. இதை இலகுவில் சாதிப்பதற்காக, இம்மன்றத்தின் தலைமைப்பீடம் வெகுசாதுரியமாக, முற்போக்குச் சிந்தனை படைத்தவர்களை அணுகுவதில்லை. அவர்களை முக்கியமான விசயங்களுக்கு அனுமதிப்பதுமில்லை. தென்னகத்தில் இரண்டாவது மாநாடு நடந்த பொழுது, தி.மு.க வின் ஒத்துழைப்புடனும், பக்க பலத்துடனும் அது வழி நடத்தப் பெற்றது. நான்காவது மாநாடு, இந்நாட்டில் தமிழர் கூட்டணிச் சக்திகளின் முழுப் பலத்துடனும் நடத்தப் பெற்றது. இதில் நாம் ஊன்றிக் கவனிக்க வேண்டியது, திட்டமிட்டே சோசலிஸ்ட்டுகளையும், முற்போக்காளர்களையும் விலக்கி வைத்து, அவர்களைத் தமிழின விரோதிகள் எனக் காட்ட முயல்வதாகும்.

எனினும் ஏகாதிபத்திய சார்பும், முற்போக்கு எதிர்ப்பு நோக்கமும் கொண்ட மன்றத்தினர், தமது திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பக்கத்துணையாக அணிதிரட்டியோரைப் பார்த்தவுடனேயே, அவர்களது சுயரூபம் தெளிவாகி விடுகிறது. வெளிநாட்டுப் பிரமுகர்களுக்கு உண்டியும் உறையுளும் அளிக்க வேண்டும் என்ற சாக்கில், உள்ளூர் பண மூட்டைகள், மேனாட்டுத் தாக்கம் தமிழில் எவ்வாறு அமைந்தது என்பதைக் காட்ட வேண்டும் என்ற பெயரில் **கத்தோலிக்க பாதிரிமாரின்** பங்களிப்பு, இளைஞர்களின் பங்களிப்பு என்ற கோசத்தில் தமிழரசு வாலிபரின் பங்குபற்றல், இவற்றோடு காலங்காலமாக யாழ்ப்பாணத்தில் செல்வாக்குடன் விளங்கிய சில குடும்பங்கள், பிரமுகர்களின் முக்கியத்துவம், இவையே யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட மாநாட்டின் வெளிப்படையான அம்சங்கள். ஆனால் இவற்றுக்குப் பின்னால் சர்வதேச சதி ஒன்றே இடம் பெற்றது என்பதில் ஐயமில்லை.

கிழக்கு பாகிஸ்தான் (இன்று பங்களாதேஸ்), இந்தோனேசியா போன்ற நாடுகளில் இளைஞர்களைத் தூண்டிவிட்டுப் பயன்படுத்தியது போல, யாழ்ப்பாணத்திலும், மொழியுணர்ச்சியில் வளர்க்கப்பட்ட இளைஞர்களைப் பகடைகளாக உருட்டி, அசம்பாவிதங்களை ஏற்படுத்தி, பிரிவினைச் சக்திகளுக்கு மேலும் வலுவளிப்பதே தலைமைப்பீடத்தின் பிரதான குறிக்கோளாக இருந்திருக்கிறது. இத்தகைய பிற்போக்கு அரசியல் திட்டங்கள் அடிப்படையான குறிக்கோளாய் இருந்தபடியாலேயே, மாநாட்டிற்கு உண்மையான தமிழறிஞர்களை அழைக்கவோ அல்லது பரந்துபட்ட முறையில் பிரதிநிதிகளை வரவழைக்கவோ, தலைமைப்பீடம் கவனஞ் செலுத்தவில்லை. ஒவ்வொரு கட்டத்திலும் முற்போக்காளர்களையும், தேசியவாதிகளையும் ஒதுக்கித் தள்ளி வைத்தது. இந்தியாவிலிருந்து ஜனார்த்தனம் போன்ற 'கழிவுகளை'யே திட்டமிட்டு இறக்குமதி செய்தது.

இன்றைய நிலையில், இந்த நாட்டைப்பற்றி உலகின் பல பாகங்களில் அவதூறு செய்யவும், குழப்பமான கருத்துக்களைப் பரப்பவும், இம்மாநாட்டைத் தலைமைப்பீடம் பயன்படுத்தியது என்பதிலும் ஐயமில்லை. உண்மையாக தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இந்நாட்டுத் தமிழ் எழுத்தாளர் எவரையும் மாநாடு தக்கபடி சேர்த்துக் கொள்ளாமை, அதன் பக்கச்சார்பையும் அந்தரங்கத்தையும் காட்டுகிறது எனலாம். மாநாட்டையொட்டி நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில், ஆறுமுகநாவலர் பெற்ற இடத்தை எண்ணினால் எவருக்குத்தான் ஆத்திரம் உண்டாகாது?

ஆனால் ஒன்று மட்டும் கூறலாம். மாநாட்டை நடத்தியவர்கள் மக்களை மதித்துப் போற்றவில்லை. அவர்களைப் பயன்படுத்தவே விரும்பினர். கருத்தரங்குகளில் பண்புக்குப்பதில் பண நிலையே கணிக்கப்பட்டது. இதன் காரணமாக சாதாரண மக்கள் இதில் உணர்வுபூர்வமாகக் கலந்து கொள்ளவில்லை. மாநாட்டின் போலித்தன்மையும், விதேசியத்தன்மையும், உயர்மட்டத்தன்மையும், அடிப்படையான ஆங்கில மோகமும், அரசியல் அட்டகாசங்களும், எப்படியோ முதலிலிருந்தே சாதாரண மக்களுக்குத் தெரிந்துவிட்டது. மக்களை எந்தக் கெட்டிக்காரனும் ஏமாற்ற முடியாது. எனவேதான் இறுதிக்கட்டத்தில், மாநாட்டைப் பயன்படுத்தி, தனிநாடு கோரும் குரல்கள் எழுந்ததும், மக்கள் பொத்தென்று கைவிட்டனர்.
*


## புதிய வெளியீடுகள்!

*இதுவரை 20க்கும் அதிகமான பயனுள்ள பல்துறை நூல்களை வெளியிட்டுள்ள இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம், சமீபத்தில் பின்வரும் நான்கு புதிய நூல்களை வெளியிட்டுள்ளது.*

- ***மார்க்சிய உளவியலும் அழகியலும்***
  - ***பேராசிரியர் சபா ஜெயராசா***
- ***உலகமயம் - பண்பாடு - எதிர்ப்பு அரசியல்***
  - ***லெனின் மதிவானம்***
- ***காலவெள்ளம்***
  - ***நீர்வை பொன்னையனின் புதிய சிறுகதைத் தொகுதி***
- ***கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் - நகைச்சுவை - ஆளுமை - தீர்க்கதரிசனம்***
  - ***தொகுப்பு : சண்முக சுப்பிரமணியம்***

*இந்நூல்களையும், முன்னைய வெளியீடுகளையும் பெற விரும்புவோர், பின்வரும் தபால் அல்லது மின்னஞ்சல் முகவரிகளில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.*

Sri Lanka Progressive Art & Literature Association
18-6/1, Collingwood Place
Colombo-6
Sri Lanka
e-mail: kailashpath@yahoo.com

## ஒரு பொய்யும் ஒரு உண்மையும்

(யாழ்ப்பாணத்தில் நடந்த நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் நிகழ்ச்சியின் போது ஏற்பட்ட அசம்பாவிதம் சம்பந்தமாக, 'அலை ஓசை'யில் வெளிவந்த திரு.ஜனார்த்தனம் அவர்களின் அறிக்கையிலிருந்து சில பகுதிகளையும், அது சம்பந்தமாக உண்மையை எழுதிய 'வீரகேசரி'யின் ஆசிரிய தலையங்கத்தில் இருந்து சில பகுதிகளையும் கீழே தருகின்றோம்.)

### ஜனார்த்தனத்தின் அறிக்கையிலிருந்து

"….'.ஜுலியன் வாலாபாக்' கொடுமை போல் நடந்த இத்தாக்குதலில் ஒன்பது பேர் இறந்ததாகச் செய்தி அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையில் நூர்று பேருக்கு மேல் இறந்திருக்கக் கூடும்.

கும்பல் கும்பலாக மக்கள் குற்றுயிராக விழுந்து கிடந்ததை பல இடங்களில் நான் கண்டேன். இவர்களில் ஒரு சிலர்தான் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றனர்.

போலிஸ் லாரியிலேயே பலரை எடுத்துப் போட்டுக்கொண்டு போனார்கள். அவர்கள் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை. காட்டுப் பகுதிக்குக் கொண்டு பொலிசார் அவர்களை எரித்திருக்கக் கூடும்….."
(12 – 1 - 74 'அலை ஓசை'யில் வெளிவந்த ஜனார்த்தனம் அவர்களின் அறிக்கை)

### 'வீரகேசரி' ஆசிரிய தலையங்கத்திலிருந்து

"…..யாழ்ப்பாணச் சம்பவத்தைப் பற்றி உலகத் தமிழ் இளைஞர் பேரவையின் செயலாளரென வர்ணிக்கப்படும் திரு.ஜனார்த்தனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் பல விசயங்கள் அப்பட்டமான பொய் என்பதை இங்கு இடித்துக் காட்ட விரும்புகிறோம். இலங்கையிலுள்ள பத்திரிகைகள் அனைத்தும் அரசாங்க கட்டுப்பாட்டின் கீழ் உள்ளவையென்ற கூற்று பச்சைப் பொய்…..

யாழ்ப்பாணச் சம்பவத்தில் நூற்றுக்கணக்கானோர் பலியாகியதாக அவர் சொல்லியிருப்பது பொய்களுக்கெல்லாம் சிகரம் வைத்தது போன்ற பெரும் பொய்!….."
(26 – 1 – 74 'வீரகேசரி' ஆசிரிய தலையங்கம்.)

---

## கேள்வி – பதில்

அடுத்த இதழிலிருந்து 'வானவில்' கேள்வி – பதில் பகுதி ஒன்றை ஆரம்பிக்க எண்ணியுள்ளது. வாசகர்களிடமிருந்து பயன்மிக்க கேள்விகளை எதிர்பார்க்கின்றோம்.

ஆசிரியர் குழு

---

*பின்பக்கத்தொடர்ச்சி..*

*வில்லியத்தின் அடுத்த அறையில், இன்னொரு பயங்கரக் குற்றவாளியான, பாடசாலை மாணவியொருவரைக் கொலை செய்த போல் பேர்னார்டோ (Paul Bernardo) என்பவர் அடைக்கப்பட்டுள்ளார். வில்லியம் தனக்கு அடுத்த அறையில் அடைக்கப்பட்டுள்ள கைதியுடன் பேச முடியும். ஆனால் அவரைப் பார்க்க முடியாது. வில்லியம் அண்மையில் விமானப்படை சேவையிலிருந்து உத்தியோகபூர்வமாக விலக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.*
*

*முன்பக்கத்தொடர்ச்சி..*

1987ல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஐ.தே.க. ஆட்சிக்காலத்தில், இந்தியாவின் நிர்ப்பந்தத்தால் உருவான ''இந்திய - இலங்கை உடன்படிக்கை'' யின் கீழான தீர்வை விடுத்துப் பார்த்தாலும், இலங்கையில் மஹிந்த ராஜபக்சவின் சொந்தக் கட்சியான சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னைய ஆட்சித் தலைவர்களால் முன் வைக்கப்பட்ட இரண்டு நல்ல தீர்வுத் திட்டங்கள் மஹிந்தவுக்கு முன்னால் உள்ளன.

ஒன்று, எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்கவினால், தமிழரசுக்கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் 1957ல் உருவான ''பண்டாரநாயக்க – செல்வநாயகம்'' உடன்படிக்கையின் அடிப்படையிலான தீர்வு. அன்றைய காலகட்டத்தில் மிகச் சிறந்த தீர்வாகக் கருதப்பட்ட அதை, ஐக்கிய தேசியக்கட்சி குழப்பம் விளைவித்து அதைக் கிழிததெறிய வைக்காவிட்டால், பின்னர் நாட்டில் இனப்பிரச்சினையின் பெயரால் இவ்வளவு ரத்த ஆறும் ஓடியிருக்க வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது.

இரண்டாவது, இலங்கையின் புகழ்மிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு பிரதமர்களாக இருந்த பண்டாரநாயக்க அவரது மனைவி சிறீமாவோ ஆகியோரின் புதல்வியான சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த போது, 2000ம் ஆண்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைத்த, இலங்கையைப் பிராந்தியங்களின் ஒன்றியமாக அமைக்கும் ஓரளவு சமஸ்டி முறையிலான தீர்வாகும். அதையும் ஐ.தே.க நிறைவேற்றவிடாமல் முறியடித்தது. பிரேமதாச 1990ல் ஜனாதிபதியானதும், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் உருவான வடக்கு – கிழக்கு இணைந்த மாகாண சபையை ஒழித்துக்கட்ட புலிகள் எவ்வாறு அவருக்கு உதவினாகளோ, அதேபோல சந்திரிகாவின் தீர்வையும் முறயடிக்க ஐ.தே.கவுக்கு புலிகளும், அவர்களால் வழி நடாத்தப்பட்ட தமிழர் விடுதலைக்கூட்ணியும் உதவின.

ஆனால் மஹிந்தவின் இன்றைய நிலையை எடுத்து நோக்குகையில், 1957ல் பண்டாரநாயக்கவுக்கோ அல்லது 2000ம் ஆண்டில் சந்திரிக்கவுக்கோ இருந்த பாதகமான அரசியல் சூழல் அவருக்கு இல்லை எனலாம். அவருக்கு இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பின்படி, எதையும் சாதிகக் கூடிய மூன்றில் இரண்டு பெரும்பான்மை பாராளுமன்றத்தில் உள்ளது. எனவே இலங்கையின் நீண்டகால இனப்பிரச்சினைக்கு அவரால் தீர்வொன்றைக் காண முடியும். ஆனால் தீர்வு என்ன என்பதுதான் தற்போதைய கேள்வி. தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இந்திய - இலங்கை அடிப்படையிலான மாகாணசபை முறைமையை அமுல்படுத்தினாலே, தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் பெரும்பகுதி தீர்ந்துவிடும் எனக் கருதுகிறார்கள்.

ஆனால், அண்மையில் மஹிந்த இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில், தனது மனதில் தீர்வுத் திட்டமொன்று உள்ளதாகத் தெரிவித்துள்ளாரே தவிர, அது என்ன என்பதைத் தெரிவிக்கவில்லை. மஹிந்தவின் கூற்றை நோக்குகையில் இந்திய - இலங்கை ஒப்பந்தம், சந்திரிகாவின் தீர்வு என்பனவற்றை விட, வேறு புதிய திட்டமொன்றை அவர் மனதில் கொண்டுள்ளதாகவே எண்ணத் தோன்றுகிறது. அப்படி ஏதாவது மஹிந்தவிடம் இருந்தால், அதை உடனும் நாட்டு மக்கள் முன்னால் வெளிப்படுத்துவது அவரது கடமையாகும். அப்படியில்லாமல் காலத்தை இழுத்தடித்துச் செல்வது, தமிழ் மக்களின் மனதில் அவநம்பிக்கையையும், விரக்தியையும் ஏற்படுத்துவதுடன், திரும்பவும் வன்முறையைப் பாதையை நோக்கிச் செல்வதற்குத் தூண்டவும் கூடும்.

மஹிந்த 13வது திருத்தத்தின் கீழான மாகாணசபை முறைமையை விட கூடுதலான தீர்வு ஒன்றை முன்வைக்க விரும்புவாரானால், அது வரவேற்கப்பட வேண்டிய ஒரு விடயம். அப்படியில்லாவிடின், மாகாணசபை முறைமையையே முழுமையாக நடைமுறைப்படுத்தும் வேலையில் மஹிந்த அரசு உடனடியாக ஈடுபடுவதே இப்போதைக்கு சாலவும் சிறந்தது. ஏனெனில் மக்கள் கடந்த 60 வருடங்களாகக் காத்துக்காத்து, சலிப்பின் எல்லைக்கு வந்துவிட்டார்கள்.

*

# வட அமெரிக்க செய்திகள்

- ***ஜீ 20 சம்பவங்கள் குறித்து கண்டனம்!***

*2010 யூன் மாதத்தில் கனடாவில் நடைபெற்ற ஜீ 20 நாடுகளினது தலைவர்களின் உச்சி மாநாட்டின் போது, அம்மாநாட்டுக்கு எதிராக பல்லாயிரக்கணக்கான கனடிய மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதும், அதில் ஆயிரம் பேர் வரையில் கைது செய்யப்பட்டு, அதிலும் நூற்றுக்கணக்கானோர் பல வாரங்களாகத் தடுத்து வைக்கப்பட்டதும், கனடிய மக்கள் மத்தியில் பெரும் சர்ச்சையையும் கண்டனத்தையும் கிளப்பியிருந்தது.*

*இந்த மாநாட்டின் போது, கனடிய பொலிசார் நடந்து கொண்ட முறையானது காட்டுமிராண்டித்தனமானது எனவும், அதற்குரிய அதிகாரங்களை வழங்கிய அரசின் ஆணை கண்டனத்துக்குரியது எனவும், பல மனித உரிமை அமைப்புகளும், சிவில் அமைப்புகளும் குற்றம் சாட்டியிருந்தன. இது பற்றி பொலிசார் தரப்பிலும், அரசு தரப்பிலும் பல விசாரணைகளும் நடைபெற்று வந்தன. இந்த சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களில், பெரும்பாலும் எல்லோரும் விடுவிக்கப்பட்டு விட்டனர் எனினும், இது சம்பந்தமான மக்களின் ஆத்திர உணர்வு ஆறாமலே இருந்து வந்தது.*

*இந்த நிகழ்வின் போது* Adam Nobody *என்னும் ஆர்ப்பாட்டக்காரரை பொலிசார் தாக்கும் காட்சிகளை அண்மையில் ரொறன்ரோ ஸ்ரார் பத்திரிகை பிரசுரித்திருந்தது. அவர் மீதான தாக்குதலுக்காக பொலிஸ் அதிபர்* Blair *பகிரங்க மன்னிப்பும் கேட்டிருந்தார். இந்தத் தாக்குதல்களின் போது சில பொலிசார் தாம் வழமையாக அணியும் தமது பெயர்ப் பட்டியை அணியாமலே தாக்குதல்களில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கும் ரொறன்ரோ ஸ்ரார், அதை பொலிஸ் அதிபரும் ஏற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது. இப்பொழுது இந்த சம்பவம் குறித்து, ஒன்ராறியோ மாகாண ஆலாட்சி அதிகாரி* (Ombudsman) Andre Marin *மிகுந்த கண்டனம் தெரிவித்து அறிக்கையொன்றை விடுத்திருக்கிறார். அதில் அவர், ஜீ20 மாநாட்டின் போது பொலிசாருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள், யுத்த காலத்தில் வழங்கப்படுபவைக்கு ஒப்பானவையாக இருந்துள்ளன எனவும், அதன் மூலம் மக்களின் குடியுரிமைகள் கனடிய சரித்திரத்திலேயே முன்னொருபோதும் இல்லாத வகையில் மீறப்பட்டுள்ளன எனவும் வன்மையாகக் கண்டனம் தெரிவித்துள்ளார்.*

- ***முன்னாள் விமானப்படை உயர் அதிகாரி வில்லியம்ஸின் இன்றைய நிலை!***

*கனடிய விமானப்படையின் உயர் தளபதிகளில் ஒருவரான றசல் வில்லியம்ஸ்* (Russel Williams) *இரண்டு பெண்களை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கொலை செய்த குற்றத்திற்காகவும், பல வீடுகளை உடைத்து பெண்களின் உள்ளாடைகளைத் திருடிய குற்றத்திற்காகவும், 25 வருடங்கள் பிணையில் வெளிவர முடியாத, இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, கிங்ஸ்ரன் பகுதியிலுள்ள கடும் பாதுகாப்பு மிகுந்த சிறையில் தண்டனை அனுபவித்து வருகின்றார்.*

*விமானப்படை உயர் அதிகாரியாக இருந்த போது, பல சலுகைகளை அனுபவித்து, உலகின் பல முக்கிய பிரமுகர்களுடன் கைகுலக்கிய வில்லியம் (ஒருமுறை எலிசபெத் மகாராணிக்கு விமானியாகவும் பணிபுரிந்தார்), தற்போது 3 தர 2.5 மீட்டர்கள் மட்டுமே விஸ்தீரணமுள்ள மிகச் சிறிய அறையில் தனது காலத்தைக் கழிக்கின்றார். ஒரு நாளின் 24 மணித்தியாலங்களில், ஒரு மணி நேரம் மட்டுமே அவர் உடற் பயிற்சிக்காக வெளியே வர முடியும். மிகுதி 23 மணித்தியாலங்களும் அந்த சிறிய அறையிலேயே அவர் இருக்க வேண்டும். தனது சிறை அறைக்குள் அவர் புத்தகங்கள் வாசிக்கவும், ஏதாவது எழுதவும் முடியும். ஆனால் கம்யூட்டரோ அல்லது இணையத்தள வசதியோ வழங்கப்படவில்லை. அவர் ஒரு தொலைக்காட்சிப் பெட்டியை தனது சொந்தச் செலவில் வாங்க முடியுமானால், அதையும் பார்க்க முடியும்.*

*தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க..*